# பூக்கட்டும் புதிய சமுதாயம்

மரபுவழி வரும் பண்பாடு, புத்துருவம் பெற்றுவரும் காலம் இது. 'பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல கால வகையினானே' என்ற நன்னூலாசிரியரின் கூற்று இக்கால உயர்வுக்கு மிகவும் பொருந்தும். பழைய மரபு சார்ந்த சிந்தனைகளை ஆராய்ந்து, காலத்துக்கேற்ற புதுமைகளைப் புகுத்துவது மிகவும் அவசியமாகிறது.

இன்றைய நவீன உலகில் தமிழர்கள் அவர்களது மூட நம்பிக்கைகளையும் எண்ணப் போக்குகளையும் மாற்றிக் கொள்வது இன்றியமையாத ஒன்றாகும். தமிழ்ச் சமுதாயம் மேன்மேலும் வளர்ந்திட நம்முள் படிந்திருக்கும் அறியாமைகளையும் மூட நம்பிக்கைகளையும் களைவது அவசியமானதாகும். அதற்கு முதற்படி கேடில் விழுச் செல்வமாகிய கல்வியறிவே ஆகும்.

**'விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்**
**கற்றாரொடு ஏனையவர்'**

என்கிறார் வள்ளுவப் பெருந்தகை. தமிழர்கள் கல்வியை உயிர்மூச்சாகக் கருதவேண்டும். ஏனெனில் அதுவே நமது சமுதாயத்தின் வளப்பத்திற்கும் செழுமைக்கும் உந்துசக்தியாகத் திகழ்கிறது. 'அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு?' என்பதற்கேற்ப தமிழ்ப் பெண்கள் கல்வியறிவு பெறுவதை அன்று மூடநம்பிக்கையுடையோர் தடுத்தனர்.

**'பெண்கள் அறிவை வளர்த்தால்- வையம்**
**பேதைமை அற்றிடும் காணீர்'**

என்ற பாரதியாரின் உயரிய கருத்து எழவே பெண்களுக்கு எட்டாக் கனியாகயிருந்த கல்வியறிவு அவர்களுக்குக் கொடுக்கப்பட்டது. இன்று ஆண்களுக்கு ஈடாகப் பெண்களும் கல்வி கற்கின்றனர், உயரிய வேலைகளில் பணியமர்த்தப்படுகின்றனர். பெண்கள் அறிவைப் பெற்றதால், அடிமைத்தனம் குறைந்து, சமுதாயமும் மேம்பட்டது.

உலகம் என்றுமில்லாத அளவு மிக வேகமாக முன்னேறி வருகிறது. இச்சூழலில் உலக வளர்ச்சிக்கு ஈடுகொடுப்பதும் உயர்தனிச் செம்மொழியாகிய தமிழையும் நமது பண்பாட்டையும் கட்டிக் காப்பதும் மிகப்பெரிய சவாலாக உருவெடுத்துள்ளது. இச்சவாலை எதிர்கொள்ள, தமிழ்ச் சமுதாயம் தன் எண்ணப்போக்கை மாற்றிக் கொள்வது மிக அவசியம். குறுகிய மனப்பான்மையோடு இல்லாமல் நல்லவற்றையும் தீயவற்றையும் சீர்தூக்கிப் பார்த்துச் செயல்படும் ஓர் உன்னதச் சமூகமாக நமது சமுதாயம் உருவெடுக்க வேண்டும். தமிழ் மக்களின் ஒற்றுமைக்குத் தடையாய் இருக்கும் இன, மத, சாதி வேற்றுமைகளைக் களைந்து, ஒற்றுமையையும், வெற்றியையும் மட்டுமே இலக்காகக் கொண்ட நற்சமுதாயமாக நாம் எழவேண்டும். இவ்வாறு இருந்தால்தான் உயர்ந்த வாழ்க்கை நிலை தமிழர்களுக்கு வசப்படும்.

தமிழர்கள் தன்னம்பிக்கையுடனும் தொலைநோக்குடனும் செயல்பட்டால்தான் வெற்றி பெற முடியும். ஆயினும், நாம் எவற்றையும் விட்டுக் கொடுக்காமல் கிடைக்கின்ற அனைத்து

வாய்ப்பு வசதிகளையும் சிறப்பாகப் பயன்படுத்தித் தமிழ்ச் சமுதாயத்தை, குன்றின் மேலிட்ட விளக்காய்ப் பிரகாசிக்கச் செய்ய வேண்டும். அதற்குத் தமிழர்களிடையே ஒற்றுமை தேவை. ‘பூக்கட்டும் புதிய சமுதாயம்’ என்னும் கூற்றுக்கேற்ப வேற்றுமைகளே இல்லாத சமுதாயமாகத் தமிழ்ச் சமுதாயம் எழ வேண்டும்.

தன்னம்பிக்கையும் கல்வியறிவும் உள்ள பல சான்றோர்களை நமது சமுதாயம் ஈன்றிட வேண்டும். ஏனெனில் அதுவே நம் சமுதாயத்தின் எதிர்காலத்திற்கு அடிப்படை. மற்ற இனங்களைக் காட்டிலும் தமிழ்ச் சமுதாயத்தில் இனப்பற்று சற்றுக் குறைவு என்றுதான் சொல்ல வேண்டும். அதற்குக் காரணமாக இருக்கும் மூட நம்பிக்கைகளை நாம் களைய வேண்டும். உயர்ந்த வாழ்க்கை நிலையை அடைய தமிழர்கள் தனித்துச் செயற்படாமல் ஒற்றுமையாகச் செயல்பட்டால் நலம் பயக்கும்; நன்மைகள் விளையும்.

கல்வி கற்றவர்களை மிகுதியாகக் கொண்டிருக்கும் சமுதாயங்களே வளர்கின்றன; செழிக்கின்றன. அதனால்தான், தமிழ்ச் சமூகமும் வளர்ந்திட, கல்வி கேள்விகளில் சிறந்த சான்றோர்கள் அதிகம் உருவாக வேண்டும். ‘கற்றவனுக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு’ என்பது போலக் கல்வி அறிவுடையோர் உள்ள சமுதாயம் என்றென்றும் பீடுநடை போடும். அதுவே அறிவார்ந்த சமூகமாக மாறும்.

தமிழர்கள் மூடநம்பிக்கைகளையும், தவறான எண்ணப்போக்குகளையும் மாற்றி, தன்னம்பிக்கை, உயர்கல்வி, போன்றவை நிரம்பப் பெற்ற ஓர் உன்னதச் சமுதாயமாக உருவெடுக்க வேண்டும். இவ்வாறு செய்தால்தான், தமிழினம் மேலும் பண்பட்டு, தமிழர்கள் உயர்ந்த வாழ்க்கை நிலையை அடைய முடியும். அதோடு தடைகளை எதிர்கொண்டு, அவற்றில் வெற்றியும் காணும் ஓர் உயர்தனிச் சமுதாயமாக, நம் சமுதாயம் ஓங்கவும் கல்வியறிவு நிரம்ப வேண்டும். மேலும் தமிழினம் ஒற்றுமையுடனும் துரிதமாகவும் செயற்பட்டால் வானமும் வசப்படும் என்று அறுதியிட்டுக் கூறலாம்.

**வீரசிங்கம் காளிச்சரண்**
**உயர்நிலை 4 உயர்தமிழ்**
**செயின்ட் பெட்டிரிக்கஸ் பள்ளி**